பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 27 சனிக்கிழமை 11.01.2025 கதிர் 065

### பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டில்

# நாடாளுமன்ற அலுவலர்கள் 3 பேருக்குப் பணி நிறுத்தம்

### சபாநாயகர் தீர்மானம்

நாடாளுமன்றத்திற்குள் பாராமரிப்புத் துறைப் பணிப் பெண்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மூவரைப் பணி நீக்கம் செய்ய சபநாயகர் ஜகத் விக்கிரமரத்தன தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அழகானபணிப்பெண்கள்சிலரைபாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தினர் என்று நாடாளுமன்ற அலுவலர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று 9ஆவது நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வலியுறுத்தியிருந்தனர். அதனடிப்படையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது மூவரை பணி நீக்கம் செய்ய சபாநாயகர் தீர்மானம் எடுத்துள்ளார்.

இந்தப் பாலியல் துன்புறுத்தல்கள் 2023 ஒகஸ்ட்டில் நடந்ததாகக் கூறப்படுகிறது. அபா லங்காதீப நாளிதழே இந்த சம்பவம் தொடர்பானதகவல்களைமுதலில்நாட்டுக்கு வெளியிட்டது.

இந்த தகவலை வெளியிட்டதன் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்நாட்டில்இன்றும்நாளையும் 'எத்திசையும் தமிழணங்கே' என்ற தலைப்பில் உலகப் புலம்பெயர் தமிழர்கள் தின நிகழ்வு இடம்பெறுகின்றது. உலக நாடுகள் பலவற்றிலும் பரந்து வாழும் தமிழர்களைஒருங்கிணைக்கும் ☞ 2

## புதிய தூதுவர்கள் குழு பிரதமருடன் சந்திப்பு

புதிதாகநியமிக்கப்பட்டதூதுவர்கள்குழு இராஜதந்திர தொடர்புகளைவலுப்படுத்தும் வழிகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இலங்கை பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவை சந்தித்தது.

வர்த்தகம், சுற்றுலா வியாபாரம் மற்றும் இரு தரப்பு உட்பட பல தரப்பு ஒத்துழைப்பின் ஏனைய பிரதான துறைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது அவதானம் செலுத்தப்பட்டது.

வர்த்தக தொடர்புகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் உலகச் சந்தையில் இலங்கை தயாரிப்புகளுக்கென புதிய வாய்ப்புகளை ஆய்வு செய்வதன் முக்கியத்துவம் ☞ 8

## வடக்கு, கிழக்கில் மழை அதிகரிக்கும்

நேற்று முதல் அடுத்த சில நாட்களுக்கு நாட்டின்வடக்கு, வடமத்தியமற்றும்கிழக்கு மாகாணங்களிலும், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. ☞ 2



### புலம்பெயர் தமிழர்கள் தின நிகழ்விற்காக

## சுமந்திரன் சாணக்கியனுடன் சிறீதரனும் தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் நடைபெறும் 'எத்திசையும் தமிழணங்கே' என்ற, உலக புலம்பெயர் தமிழர்கள் தின நிகழ்வில் தமிழக அரசின் அழைப்பின் பெயரில் கலந்துகொள்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சாணக்கியன் ஆகியோருடன் முன்னாள் ☞ 8

## உதயங்கவினால் தாக்கப்பட்ட முதியவர் மருத்துவமனையில்

ரஷ்யாவிற்கானமுன்னாள்இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் தாக்குதலுக்கு இலக்கான, அயல் வீட்டு நபர் இப்போது ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குஉள்ளானவர்66 ☞ 8

## காய்ச்சல், சளி இருந்தால் விழிப்போடு செயற்படுக

### சுகாதார நிபுணர்கள் அறிவுறுத்து

காய்ச்சல், இருமல் அல்லது சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால், பொதுமக்கள் விழிப்புடன் செயற்படவேண்டுமெனவும் மருத்துவ உதவியை உடன் நாடுமாறும் சுகாதார நிபுணர்கள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் பருவகால காய்ச்சல் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில், சுகாதாரப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, கர்ப்பிணிப் பெண்கள் காய்ச்சல் இருக்கலாம் என சந்தேகிக்கும் பட்சத்தில் ☞ 2

## ஊடகத்துறையை ஆளும்தரப்பு கையாளும் விதம் ஆபத்தானது

### முன்னாள் எம்பி பேராசிரியர் சரித்த விசனம்

தற்போதைய ஆளும்தரப்பு ஊடகத்துறையைக்கையாளும்விதம் மிகவும் ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் விசனம் வெளியிட்டுள்ளார்.

அவர் கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மைக் காலங்களில் ஆளும்தரப்பின் பிரதிநிதிகள் சிலர் ஊடகங்களுடன் முரண்பட்டு வருகின்றனர். குறிப்பாக ஊடகத்துறை அமைச்சர் நளிந்தஜயதிஸ்ஸ ஊடகங்கள்தொடர்பில் பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிட்டுவருகின்றார். சில சந்தர்ப்பங்களில் கருத்து ☞ 8

## காணாமல்போனோருக்கான அலுவலகம் மீதான நம்பிக்கையை வலுப்படுத்த திட்டம்

காணாமல்போனோர் அலுவலகம், தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கான பொறிமுறைகள்மீதானபொதுமக்களின்நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கானநடவடிக்கைகளைஆளும்தரப்பு எடுக்கவுள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டிற்கான பிரதியமைச்சர் முனீர் முலாபிர் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோருக்கான அலுவலகம் போன்றவற்றை முன்னைய ஆளும்தரப்பு அரசியல் நியமனங்களிற்காகப் பயன்படுத்தியது எனத் தெரிவித்துள்ள பிரதியமைச்சர் தற்போதைய ஆளும்தரப்பின் இந்தப் பொறிமுறைகள் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை உண்மையான நோக்கமாக கொண்டு செயற்படும் என குறிப்பிட்டுள்ளார். ☞ 8

### ரொஹிங்கிய அகதிகள் தொடர்பில்

## இலங்கையிடமிருந்து இரக்கத்தை எதிர்பார்க்கும் ஐக்கிய நாடுகள் சபை

ரொஹிங்ய அகதிகள் தொடர்பில் இலங்கையிடமிருந்து தொடர்ந்தும் இரக்கத்தையும்விருந்தோம்பலையும் எதிர்பார்ப்பதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள்உயர்ஆணையரகம் தெரிவித்துள்ளது.

நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த ரொஹிங்ய அகதிகளைக் காப்பாற்றிப் பாதுகாப்பாக தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கிய இலங்கையின்உயிர்காக்கும் செயற்பாட்டைபாராட்டியுள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஆணையம்இலங்கை அதிகாரிகளிடமிருந்து தொடர்ந்தும்இரக்கத்தையும் விருந்தோம்பலையும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளது.

''புதிய வருகையாளர்களிற்குதொடர்ந்தும்இரக்கம் மற்றும் விருந்தோம்பலை காண்பிக்குமாறு ☞ 2

## ஐதேகவும் ஐக்கிய சக்தியும் மீள இணையவேண்டும்

### பதவியேற்றதும் தலதா அத்துக்கோரள வலியுறுத்து

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மீண்டும் இணையவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

சிறிகொத்தவில் உள்ள ஐ.தே.கவின் தலைமையகத்தில் பதவியைப்பொறுப்பேற்றதன் பின்னர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினின் முயற்சியாக தமிழ்நாடு அரசின் சார்பில் இந்த மாநாடு இடம்பெறுகின்றது. இதற்காக இலங்கையில் இருந்தும் தமிழ்த் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தலைவர்களுக்கு மட்டுமல்லாது தமிழ் பேசும் முஸ்லிம் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்காக அழைக்கப்பட்டிருந்த சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோர் சென்னையைச் சென்றடைந்ததும் அங்கு திமுக நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழக முதல்வரின் சகோதரியுமான கனிமொழியைச் சந்தித்து உரையாடினர். ஈழத் தமிழரின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் அரசியல் தலைமைகளுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையில் விழுந்திருந்த விரிசல் மற்றும் இடைவெளியை நிரப்புவதற்கும் தமிழ்நாடு - ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளிடையேயான பொதுவெளித் தொடர்புகள் இந்த மாநாட்டின் மூலம் தழைத்தோங்க வழி ஏற்படும் என்று நம்புவோம். அதற்கான நம்பிக்கை அறிகுறிகள் மாநாட்டையொட்டியும் அதன் பக்க நிகழ்வுகளிலும் வெளிப்பட்டால் மகிழ்ச்சி.

தமிழ்நாடு அரசின் அழைப்பின் பெயரில் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சென்னைக்குப் புறப்படுவதற்காக நேற்று கட்டுநாயக்க பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையம் சென்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் விமான நிலைய அதிகாரிகளால் தடுக்கப்பட்டார்.

அவருக்கு எதிராகப் பயணத் தடை இருப்பதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. சில நாட்களுக்கு முன்னர்தான் தான் இராஜதந்திரக் கடவுச் சீட்டு மூலம் கனடா சென்று திரும்பியதைச் சுட்டிக்காட்டிய சிறீதரன் அப்போதெல்லாம் இல்லாத தடை இன்று எப்படித் திரும்ப வந்தது என்று வாதாடியுள்ளார். அதிகாரிகள் தரப்பில் அதற்குத் திருப்திகரமானபதில் கிடைக்கவில்லை. எப்போதோ பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் பயணத் தடை ஒன்று தொடர்பில் அவர்கள் தெளிவற்ற பதில்களை வழங்கினர் என்று கூறப்படுகின்றது. எனினும் இந்த விவகாரத்தால் விமான நிலையத்தில் பதற்றமும் இழுபறியும் ஏற்பட்டுள்ளது.

அப்போது, இதே மாநாட்டில் பங்கேற்பதற்காக இதே விமானத்தில் பயணிக்க முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் அங்கு வந்துள்ளார். சிறீதரனின் பிரச்சினையை அறிந்ததும் அவருக்கு உதவ விரைந்தார். விமான நிலைய அதிகாரிகளுடன் அவர் சிங்களத்தில் உரையாடினார். தடைக்கான காரணம் என்ன என்பதை அறிய முற்பட்டார். ஆனால் அதிகாரிகள் முன்னர் எப்போதோ பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தடை குறித்தே குழப்பகரமான பதில்களை அவரிடமும் தெரிவித்தனர் என்று தெரிகிறது.

அதன் பின்னர் விமான நிலைய அதிகாரிகளால் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அழைக்கப்பட்டனர். அவர்களும் அங்கு வந்து சிறீதரனுக்கு எதிராக குற்றவியல் வழக்கு ஒன்றில் பயணத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது என்கிற சாரப்படப் பதிலளித்தாலும் அது என்ன வழக்கு, என்ன குற்றச்சாட்டு, எப்போது பயணத் தடை விதிக்கப்பட்டது என்கிற விவரங்களைத் தெளிவாகக் கூறவில்லை

''பழைய கடவுச்சீட்டில் ஒரு தவறு இருக்கின்றது. அதனால் நீங்கள் போக முடியாது"-என்றும் அங்கிருந்த அதிகாரிகளால் இடையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படி சுமார் 2 மணி நேர இழுபறிக்குப் பின்னர் சிறீதரன் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டார்.

.......................................

பிரதான அரசியல் கட்சி ஒன்றின் தலைமை அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் வந்த பிரபல அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் அங்கிருந்தவர்களைத் திட்டி அலுவலகத்தை இரண்டாக்கி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்காக சுமார் 50 கோடி ரூபாயை கட்சிக்காகத் தான் செலவிட்டார் என்று அவர் கூறியுள்ளார்.

கட்சித் தலைவருக்கும் தேர்தல் பொறுப்பில் உள்ள ஒருவருக்கும் பணம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் வாக்குறுதியளித்தபடி தமக்குத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை எனக் கூறித் திட்டியுள்ளார்.

இது தொடர்பாகக் கட்சித் தலைமை மற்றும் பணம் கொடுத்தவர்களிடம் பேசுவதாக அங்கிருந்த அதிகாரிகள் தெரிவித்து அவரைச் சமாதானப்படுத்தி திருப்பி அனுப்பி வைத்துள்ளனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீரவினால் உள்ளக விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழு வழங்கிய முதற்கட்ட விசாரணை அறிக்கையின்படி, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழு, நாடாளுமன்ற பொதுச் செயலாளரினால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் அறிக்கை அண்மையில் பாராளுமன்ற பொதுச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இந்த பாலியல் வன்கொடுமைச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றக் கண்காணிப்புத் துறையைச் சேர்ந்த 15 ஊழியர்களிடம் அந்தக் குழு வாக்குமூலம் பதிவு செய்திருந்தது.

இதேவேளை, நாடாளுமன்றத்தின் தகவல் அமைப்புகள் மற்றும் முகாமைத்துவப் பிரிவுகளிலும் பெண்களில் சிலர் பாலியல் சீண்டல்களுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உளாக்கப்பட்டனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன. இது தொடர்பாகவும் நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளரின் உத்தரவின்படி விசாரணைகள் நடந்து வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இந்த விடயத்தை ஜனவரி 7 நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

இச்சம்பவம் தொடர்பாக, புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஏற்கனவே பலதுறை ஊழியர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர்.

இதற்கிடையில், இந்த துன்புறுத்தல் சம்பவம் குறித்து வெளியில் இருந்து சுயாதீன விசாரணை நடத்துமாறு சபாநாயகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ரொஹிங்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்" எனத் தெரிவித்துள்ள ஐ.நா. பேச்சாளர் இவர்களில் பலர் பலவீனமான நிலையில் உள்ள பெண்கள் குழந்தைகள் என்று சுட்டிக்காட்டினார். "இயலாமை காரணமாக அவர்கள் ஆபத்தான முயற்சியில் தங்கள் உயிர்களை பணயம் வைத்துள்ளனர்'' எனவும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பினைத் தேடிக் கடல் பயணங்களிற்கு பொருத்தமற்ற படகில் அவர்கள் பலவாரங்கள் பயணித்துள்ளார்கள் என அவர் தெரிவித்தார். புதிதாக வருபவர்கள் பாதுகாப்பாகத் தரையிறங்குவதை உறுதிசெய்வதும், உயிர்காக்கும் உரிமைகளைப் பெறுவதை உறுதி செய்வதும் எங்களின் முன்னுரிமைக்குரிய விடயங்கள் எனத் தெரிவித்துள்ள அவர், புதிதாக வந்துள்ளவர்களின் பாதுகாப்பிற்காக இலங்கை ஆளும் தரப்பு ஐநாவுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழைபெய்யக்கூடும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகளவான ஓரளவு பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி மாவட்டத்திலும் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்துகிறது.

## காய்ச்சல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும் என தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சிந்தன பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் நீரிழிவு அல்லது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இந்த காய்ச்சல் பாதிக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கைகளைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் முகம் அல்லது வாயைத் தொடுவதைத் தவிர்ப்பது மற்றும் பொதுவான தனிப்பட்ட சுகாதாரத்தைப் பேணுவது மூலம் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் மருத்துவர் சிந்தன பெரேரா குறிப்பிட்டார்.

இந்தக் காய்ச்சல், பரவுவதற்கான காரணம் சுவாச ஒத்திசைவு வைரஸ் (RSR - Respiratory syncytial virus, மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (HMPV - Human Metapneumo virus) மற்றும் மைக்கோபிளாஸ்மா நிமோனியா (Mycoplasma pneumoniae) போன்ற சுவாச நோய்க் கிருமிகளின் பருவகால தொற்றுநோய்களால் ஏற்படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஐதேகவும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நான் ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துகொண்டேன். அப்போதே நான் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது தூய்மையான கட்சி அல்ல. அவர்கள் அனைவரும் இதற்கு முன்னர் வேறொரு கட்சியிலேயே இருந்தனர். அது ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

நாம் இதுவரையில் ஐக்கிய தேசியக் கட்சியாகவே அவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். அவர்கள் தமது தலைவரின் ஆலோசனைப்படியே செயற்படுகின்றார்கள் ஆகவே இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டு இரண்டு தரப்பினரும் இணைந்து கொள்ள வேண்டும் என்றார்.

# சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

*அரச மருத்துவமனைகளின் கொள்ளளவு மற்றும் தேவைகளுக்குப் பொருந்தாத பௌதீக வளங்களை ஒரு திட்டமும் இன்றி வழங்குவது மருத்துவமனைகள் மற்றும் அமைச்சகத்தின் மீது பல்வேறு சிக்கல்களையும் குற்றச்சாட்டுகளையும் ஏற்படுத்துவதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.*

*சீதுவவிஜயகுமாரதுங்கஞாபகார்த்த மருத்துவமனையின் சிகிச்சை சேவைகளின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த கள ஆய்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*அரச மருத்துவமனைகளுக்குத் கட்டடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை தேவையின்றி தொடர்ந்து வழங்கி வருவதாகவும், பின்னர் அவற்றைப் பயன்படுத்த ஊழியர்களை வழங்கத் தவறுவதன் காரணமாக அமைச்சின் மீது குற்றம் சாட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்தக் கள ஆய்வின்போது, 2020 முதல் இன்றுவரை மருத்துவமனையின் செயல்திறன், அரச வருவாய் மற்றும் செலவினங்கள், நன்கொடை ரசீதுகள், அத்துடன் நிர்வாக நடவடிக்கைகள், 2025 ஆம் ஆண்டிற்கான மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் கட்டடங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட முக்கிய வரவு செலவினங்களை அமைச்சர் விரிவாக ஆராய்ந்தார்.*

*மருத்துவமனையின் செயல்படாத உபகரணங்களை மீட்டெடுக்கவும், மருத்துவமனையால் வழங்கப்படும் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை மேம்படுத்தவும் சுகாதார அமைச்சு முழு ஒத்துழைப்பினை வழங்குமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.*

# விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கை

*தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பெயரைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் பரவி வரும் விளம்பரம் குறித்து தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.*

*அரசால் அங்கீகரிக்கப்பட்ட பகுதிநேர வேலை என்று விவரிக்கப்படும் இந்த விளம்பரத்தில், நாளாந்தம் 5,000 ரூபா வருமானம் ஈட்ட முடியும் என்று கூறப்பட்டுள்ளது.*

*மேலும், நேர்காணல்கள் இணையவழி ஊடாக இடம்பெறும் என்றும், நாளாந்த சம்பளம் வழங்கப்படும் என்றும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.*

*அமைச்சினதும் அதன் உரையையும் பயன்படுத்தி, அரச இலட்சினையைப் பயன்படுத்தும் இந்த விளம்பரம் முற்றிலும் தவறானது மற்றும் உண்மைக்குப் புறம்பானது என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

*மேலும், அத்தகைய எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அமைச்சின் பொறுப்புகளுக்கு அமைய, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான நோக்கம் தொழிலாளர் அமைச்சின் கீழ் வராது என்றும் அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்த தவறான மற்றும் தவறான விளம்பரங்களை வெளியிடுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த தவறான மற்றும் தவறான விளம்பரங்கள் தொடர்பாக தனிப்பட்ட தகவல்களை வழங்குவதைத் தவிர்க்குமாறு தொழிலாளர் அமைச்சு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir

# தில் இருந்தால் வழக்கை மீளப்பெற்றுத் தர தமிழ் அரசுக் கட்சி பொதுக் குழுவை கூட்டுக

## மத்திய குழு அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்கக் கூடாது: சிவமோகன் காட்டம்

தில் இருந்தால் வழக்கை மீளப்பெற்று தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுவை கூட்டுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்கக் கூடாது எனவும் பொதுக் குழுவில் தேசிய பட்டியல் ஆசனம் பற்றி பேசப்பட்டு அது மாற்றப்பட வேண்டும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. அதன் கொள்கைகள் அது பயணிக்கும் வழித்தடம். அந்த அடைப்படையில்ஒருகட்சியைநிர்மூலமாக்குவதற்கு யாப்பை மீறி செயற்பட்டால் அதனை முடக்கலாம். இன்று எமக்கான சந்தேகம் இதுவே.

திருகோணமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச் சபையானது முடக்கப்பட்டுள்ளது. அப்போது இனி மேல் யாப்பு மீறல் செய்ய மாட்டோம் என்று பேசப்பட்டது. ஆனால் மீண்டும் அதே யாப்பு மீறலை மத்தியகுழு செய்கிறது என்றால் இதன் நோக்கம் என்ன. பொதுக்குழுவிற்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டிய விடயம். தலைவரை மாற்ற சம்மதித்தால் வழக்கை மீளப் பெறுவதாக ஒருவர் சொன்னார். முதல் அதை கண்டு பிடியுங்கள். பொதுக்குழுவை இயங்கச் செய்யுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக் கூடாது.

கடந்த ஒரு மத்திய குழு கூட்டத்தில் மாவை சேனாதிராசாவை கதிரையில் இருக்க வேண்டாம் உங்கள் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்ன நபர் மத்திய குழுவிலேயே இல்லாத ஒருவர். மத்திய குழுவில் இல்லாத ஒருவர் உள்ளே எடுகப்பட்டு அவரால் சேறு பூசப்படுகிறது. தலைவர் நிகழ்சி நிரலைதன்னிடம்காட்டிவிட்டு அறிவிக்குமாறு கடிதம் அனுப்பினார். ஆனால் அதற்கு முந்திய திகதி போட்டு பதில் செயலாளர் நிகழ்ச்சி நிரலை அனுப்பியுள்ளர். நிலைமை அவ்வாறே உள்ளது.

பதில் செயலாளர் என்ற போர்வையில் ஒருவர் இருந்து கொண்டு யாப்பை மீறி செயற்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு தில் இருந்தால் அந்த வழக்கை மீளப் பெற்று பொதுச்சபை கூடுவதற்கு இடம் தரவேண்டும். எம்மிடம் 300 இற்கு மேற்பட்ட பொதுச் சபை உறுப்பனர்கள் இருக்கிறார்கள். அதை செய்தாலே மாபியாக்ளிடம் இருந்து தமிழரசு கட்சியை மீட்கமுடியும்.

பொதுத் தேர்தலில் முதல் முறை போட்டியிட்ட ஒருவர் சொன்னார் நான் தோற்றால் அரசியலுக்கு வரமாட்டேன் என்று. ஆனால் இரண்டாம் தரமும் தோற்றுவிட்டு தேசிய பட்டியலை பெறும் ஆசையில் இருக்க கூடாது அல்லவா. தேசிய பட்டியல் என்பது சமுதாயத்தில் கௌரவமான ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏறி மிதிச்சாலும் தலையை தூக்கத் தெரியாத நாக்கிளி பாம்புகள், காணி பிடிக்கின்ற மாபியாக்கள், ஜனநாயக மறுப்பை செய்யும் சுயநலவாதிகள் இவர்களே தேசிய பட்டியலில் வந்தவர்கள். இதனால் கட்சியை வளர்க்க முடியுமா?

கட்சியின் பொதுக்குழு கூடும் போது தேசியபட்டியலை நாங்கள் மீள் பரிசீலனை செய்வோம். கட்சியை மீட்பதற்காக மாத்திரமே நான் போராடுகிறேன். நான் வெளிநடப்பு செய்யும் வரை 4 மணித்தியாலம் கூட்டத்தில் இருந்தேன். அப்போது எனக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை சொல்ல திராணியற்றவர்கள். நான் போன பின் எனக்கு எதிரான குற்றங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். மத்திய குழுவில் இருந்து என்னை நீக்கியதாக கூறினார்கள். மத்திய குழு உறுப்பினரை நீக்கும் அதிகாரம் மத்திய குழுவிற்கு இல்லை என்று கட்சியினுடைய யாப்பின் விதி ஏழு கூறுகிறது. அந்த அதிகாரம் பொதுச் சபைக்கே இருக்கிறது. கடந்த கூட்டத்தை விட்டு நான் வெளியேறிய பின்னர் என் மீது குற்றத்தை முன்வைத்து என்னை இடைநிறுத்தியதாக அவர்கள் பிரசாரம் செய்தார்கள். பொதுச்சபையை கூட விடுங்கள்.

எனவேஎன்னைநீக்கியமைதொடர்பானஉண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி 72 மணித்தியாலங்களில் பதில் அளிக்குமாறு கோரி பதில் செயலாளருக்கு நான் கடிதம் அனுப்பியிருந்தேன். அதன் பிரதிகள் தலைவர் மாவை சேனாதிராசா, பதில் தலைவர் சிவஞானம், தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறிதரன் ஆகியோருக்கும் அனுப்பியிருக்கிறேன். வெறுமனே வாய் சவடால்களால் கட்சியின் பதவிகளைப் பறிக்க முடியாது. அதற்கென்று ஒழுங்கு முறை உள்ளது.

கொழும்பான்களில் இருந்தவர்களின் கூக்குரலுக்கு பயந்தவன் நான் அல்லன். தமது பிள்ளைகளை சிங்களவர்களுக்கு கட்டிக் கொடுத்து விட்டு சிங்களவர்களுடன் சமரசம் பேசி உலாவுபவர்களை இந்த மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்காகவா இந்த மண்ணில் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள் மரணித்தார்கள். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் உச்ச எல்லையாக தமிழீழத்தை நிர்ணயித்தார்கள். அதேபோல் பூரண சமஸ்டி அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையைக் கோரி ஆரம்பித்தது தமிழரசுக் கட்சி. எனவே இதில் சமரசம் பேச இடமில்லை.

தமிழரசுக் கட்சி ஒரு சமஸ்டிக் கட்சி. சிலர் அதனை புதிய கண்டு பிடிப்புக்கள் போல கூறி சமரசம் பேசி உருக்குலைக்க முயல்கிறார்கள்.




என்னைப் பொறுத்த வரை அது நடைபெறாது. இது எங்களுக்கு கிடைக்காமல் இருந்தால் கூட இதனை நாம் எமது சந்ததிக்கு கடத்த வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அதனை நம்பித்தான் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பொது மக்கள் மரணித்தார்கள். யுத்த காலத்தில் எனது பிள்ளைகளுடன் கிபிர் குண்டு வீச்சு, குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை 5 வருடம் நிர்வகித்தேன். மருந்து தட்டுபாடு, குருதி தட்டுபாடு, கட்டடங்கள் இல்லை, கட்டில்கள் இல்லை. ஆனால் சுகாதார ஆளணியுடன் இணைந்து பணியாற்றினோம். நாம் வலி கண்டவர்கள்.

நீங்கள் எங்கு இருந்தீர்கள்..? யுத்தம் மௌனித்த போது சிலர் குறிப்பாக மாவை சேனாதராசா பற்றி பேசுபவர் எங்கிருந்து வந்தார். மக்கள் மரணித்து கொண்டிருந்த போது பால் சோறு உண்டவர்கள். அவர்களுடன் இணைந்து சமரசம் உலாவியவர்கள். இன்று அவர்கள் இந்த மண்ணில் தங்களது நிலைப்பாடடை நிலை நிறுத்த ஒரு போதும் விடமாட்டோம் எங்களுக்கு கட்சி, பதவி தேவையில்லை. எந்த நோக்கத்திற்காக வன்னி மண்ணில் நின்றோமோ அதனை உருக்குலைக்க விடப்போவதில்லை.

ஒரு விடயத்தை தீர்மானித்தால் கட்சி நிர்வாகிகளுக்கு அந்தக் கடிதத்தை அனுப்புவதற்கு திராணி இருக்க வேண்டும். மாவை சேனாதிராசா இராஜினாமா செய்வதாக இவர்களுக்கு சொல்லவே இல்லை. தங்களது தேசியப் பட்டியல் நாடாளுமன்றத்தை வேண்டிய பின் தான் மாவை சேனாதிராசாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். தேசியப் பட்டியல் ஆசனம் குழம்பி விடக் கூடாது என்பதற்காக அதுவரை பொறுத்திருந்து அவரைக் கூட்டிக் கொண்டு தலைவராக மேசையில் இருந்தி தங்களது தேவையை நிறைவேற்றினார்கள்.

அதற்கு முதலே அவர் பதவி விலகி விட்டதாக சொல்லியிருந்தார்கள். ஆனால் இராஜினாமா செய்யவில்லை என மாவை சேனாதிராசா கடிதம் எழுதியுள்ளார். மாவை சேனாதிராசா முன்னர் எழுதிய கடிதம் சிவஞானம் சிறிதரன் அவர்களுக்கு எழுதப்பட்டது. அதில் நான் இராஜினாமா செய்ய எண்ணியுள்ளேன். அந்த பொறுப்பை ஏற்க முன்வாருங்கள் என்று தான் குறிப்பிட்டு இருந்தார். அதன் அர்த்தம் என்ன நீங்கள் வந்தால் நான் உங்களிடம் தந்து விட்டு விலகி விடுவேன் என்பது தானே.

மாவை சேனாதிராசா ஒரு போராளி. அவரை பதவியாக பார்க்க முடியாது. ஆரம்ப காலத்தில் இருந்து அடிபட்டு சிறைச்சாலை சென்று வந்த ஒரு தலைவன். அவரை அசிங்கப்படுத்தி வெளியில் அனுப்ப முடியுமா? என்னை நீக்குவதாக சொன்னார்கள். அந்தக் கடிதமும் இன்னும் கிடைக்கவில்லை. கடிதம் எனக்கு கிடைத்தால் பதில் செயலாளருக்கு எம்மை நீக்கும் அதிகாரம் இல்லை என்று கூறி உடனடியாக பதவி விலக வேண்டும் என வழக்கு தாக்கல் செய்வேன். இவர் நியமனம் செய்யப்பட்ட பதில் செயலாளர் 4 வருடங்களாக பொதுச் சபையால் அங்கீகரிகப்படவில்லை. மாவை சேனாதிராசா அவர்கள் பொதுச் சபையை கூட்டுமாறு பல தடவை கூறியும் அதை அவர்கள் செய்யவில்லை. அவர்கள் தாம் நினைத்ததை செய்ய முயல்கிறார்கள். அடுத்து எமது இனத்தை எங்கு கொண்டு சென்று விற்க முடியும் என தேடுகிறார்கள். அவர்களது திட்டத்திற்கு இணங்க முடியாது எனத் தெரிவித்தார்.

100

# கிண்ணியா வான் எலயில் நிலக்கடலை அறுவடை

(ஹலால்தீன்)

கிண்ணியவான்எலேபுஹாரிவித்யாலயத்தின் நிலக்கடலை அறுவடை நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

பாடசாலையில் பயிரிடப்பட்ட கச்சான் ,சோளம் ,போஞ்சி முதலான மரக்கறிகளின் பெரும்போக அறுவடை நிகழ்வு நேற்று அதிபர் ஏ எஸ் எம் ஜாபிர் தலைமையின் கீழ் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர் முனவரா நளீம் மற்றும் கல்வி அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது மாணவர்களின் கற்றல் தேவையை எமது பாடசாலையில் பூர்த்தி செய்ய உதவும் ஒரு கருவியாக இவ்விவசாய செயற்பாடு இடம்பிடித்துள்ளது.



இப்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு உதவியாகபயருஷ், பெரோஸ், அயாஸ்,ஜவாஹிர் மற்றும் மாணவர்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊடகங்கள் மீதான அழுத்தம்

இலங்கையில் மிக நீண்ட காலம் எதிர்க் கட்சியாகவே இருந்தது ஜேவிபியும் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும். அப்போதெல்லாம் ஆளும் தரப்புக்கு எதிராகவும் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது அவற்றின் வழக்கம். ஊடகங்கள் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளை வெளியிட்டு வந்தன.

பிரதான எதிர்க்கட்சியாக இல்லாதபோதும் நாடாளுமன்றத்தில் ஜேவிபி உறுப்பினர்கள் ஆற்றுகின்ற உரைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கும் அதன் நாளாந்தச் செய்தியாளர் சந்திப்புக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க ஊடகங்கள் மறந்ததில்லை. இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் எப்போதுமே ஆட்சியாளர்களுக்கும் அதிகாரத்திற்கும் எதிரான மனநிலையே ஊடகங்களில் ஓங்கி இருக்கும் என்கிற நிலையில் ஜேவிபியின் செய்திகள் அவற்றுக்கு உரமளித்து ஊக்கமளித்தன என்பதையும் மறுக்கமுடியாது.

அப்போதெல்லாம் ஊடகங்களின் அத்தகைய போக்கு ஜேவிபிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இனிப்பாக இருந்தாலும், தாம் ஆட்சியாளர்களானதும் அது போக்கில் ஊடகங்கள் செயற்படுவதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்பது இப்போது தெளிவாகின்றது. ஆளும்தரப்பையும் ஆட்சியாளர்களையும் குறைகூறியும் எதிர்க் கருத்துக்களை வெளிப்படுத்தியும் செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் மீது பொறுமையின்றி சீறிப் பாயத் தொடங்கியிருக்கின்றார்கள் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்களும் உறுப்பினர்களும். தாம் எதிர்த் தரப்பிலிருந்தபோது மகிழ்ச்சி தருவதாக இருந்த ஊடகங்களின் போக்கு இப்போது அவர்களுக்குக் கசக்கத் தொடங்கியிருக்கிறது.

ஆளும்தரப்பின் இந்தப் போக்கும் ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்களின் போக்குக்கு மாறுபட்ட ஒன்றல்ல. ”முறைமை மாற்றம்” ஒன்றை முன்வைத்து ஆட்சியைப் பிடித்த தேசிய மக்கள் சக்தி, ஏற்கனவே ரணில் – ராஜபக்சக்களின் வழியில்தான் பொருளாதார முன்னேற்றத்தில் நகர்ந்து வருகின்றது என்கிற குற்றச்சாட்டு இருக்கும் நிலையில், இப்போது ஊடகங்கள் விடயத்திலும் அது முன்னைய ஆட்சியாளர்களின் பாதையிலேயே பயணிக்க முயற்சிப்பது ஏமாற்றம் தருவதாகவே அமைகின்றது.

இதனையே ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத்தும் சுட்டிக்காட்டி விசனம் தெரிவித்துள்ளார்.

”அண்மைக் காலங்களில் ஆளும்தரப்பின் பிரதிநிதிகள் சிலர் ஊடகங்களுடன் முரண்பட்டு வருகின்றனர். குறிப்பாக ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்கள் தொடர்பில் பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிட்டுவருகின்றார். சில சந்தர்ப்பங்களில் கருத்து வெளியிடுகையில், பத்திரிகைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். நாடாளுமன்றத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெயர்களைக்கூறி உரையாற்றுகின்றார். நான் கடந்த காலங்களில் ஊடகத்துறை அமைச்சில் பணியாற்றியவன் என்ற ரீதியில், தற்போதைய ஆளும்தரப்பு ஊடகத்துறையைக் கையாளும் விதம் மிகவும் ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆளும்தரப்பு தற்போது பதற்றமடைந்து துலங்கலை வெளிக்காட்டும் நிலையை அடைந்திருக்கின்றது. வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடக்கூடும். இருப்பினும் நாம் அதனைப் பொறுமையுடன் கையாண்டு, அதற்கு அறிவார்ந்த ரீதியில் பதிலளிக்கவேண்டும். மாறாக ஊடகங்கள் தமக்கு ஏற்றவாறு அல்லது தமக்குச் சார்பாகச் செயற்படவில்லை என ஆளும் தரப்புப் பதற்றம் அடையக்கூடாது. எனவே பிரதமர், ஊடகத்துறை அமைச்சர் உள்ளிட்ட ஆளும்தரப்பின் பிரதிநிதிகள் ஊடகங்களைப் பெயர் குறிப்பிட்டுத் தாக்குவதை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்’’ என்று அவர் மிகச் சரியாகவே குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஊடகங்கள் அரசியல் பின்புலங்களைக் கொண்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அது பின்புல ஊடகங்கள்தான் கடந்த காலங்களில் ஜேவிபியையும் ஆதரித்தன என்பதையும் மறந்துவிடலாகாது. இலங்கையின் ஊடகக் கலாசாரம் இன்னும் பல காத தூ–ரம் முன்னேறவேண்டும் என்பது ஏற்புடையதேயாயினும், ஆட்சியிலுள்ளவர்கள் ஊடகங்களைத் தாக்குவதால் அந்த மாற்றம் நிகழ்ந்துவிடாது என்பதும் புரிந்துகொள்ளப்படவேண்டும். ஊடகங்கள் மீதான ஆளும்தரப்பின் வெறுப்புணர்வும் தாக்குதலும் ஏனையவர்களுக்கும் ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் தாக்குவதற்கான வெளியைத் திறந்துவிடும் ஆபத்தும் உண்டு. அது இந்த நாட்டின் ஜனநாயகத்தை அடியோடு பாதிக்கும் என்பதால் ஆட்சியாளர்கள் இது விடயத்தில் மிகக் கவனத்தோடு நடந்துகொள்வது அவசியம்.



## ஏனிந்தக் கட்சிகள்? யாரிந்தத் தலைவர்கள்?

**சதாசிவ ஐயர்**

சங்கூதி, மாம்பழம் விற்றவர்களும் பாதாளக் கிணற்றுக்குள் சுற்றி சுற்றி சைக்கிளோடினவர்களும் இங்கிலீசில நாலைஞ்செழுத்த மாறி மாறிப்போட்டு வவுனியாவுக்கு இங்காலும் அங்காலும் இயக்க நாடகம் நடத்தி இப்ப அரசியல் நாடகம் நடிக்கிறவையும் குளத்தோடு கோவிச்சவுடன் ......களுவ தனது தலைமையில் தனியாய் குளம் தோண்டினவையும் அடிக்கடி மைக்பிடிக்கிற சமூக ஆர்வலரும் ஆளுக்கொரு அமைப்பும் தமக்குத்தான் எல்லாம் தெரியும் என வகுப்பெடுக்கும் பத்தி எழுத்தாளர் சிலரும் இப்ப ஏதோ விவேகம் வந்தமாதிரி வேகமாய் ஓடித்திரியினம். எங்களுக்கொரு வீடு வேண்டும் என்கின்றனர். ஆனால் வீட்டுக்க இருக்கிறவையும் மிக்க நிதானத்தோடு நல்ல மரியாதையாக ஓம் வாங்கோ இருங்கோ தேத்தண்ணி குடியுங்கோ என்ன விசயம் ஓ அப்படியா நல்ல விசயம்தான் அதற்கென்ன பார்ப்பம் குடும்பத்தாருடன் கதைச்சிட்டு சொல்லுறன் என தமிழர் பண்பாடாக வழியனுப்பி வைக்கினம்.

வரவேற்கவேண்டிய விடயம்தான் இதில குத்தி முறியிறதுக்கு ஒண்டுமில்லை. அவசரமுமில்ல. நான்முந்தி நீ முந்தி என தலைப்பாகட்டிக்கொள்ள சிலர் விரும்பினம். அவசரப்படுகினம். அவ்வளவுதான். அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களே, ஆளுக்கொரு கட்சி வைத்திருப்பவர்களே, உங்களுக்கெல்லாம் ஏன் கட்சிகள்? 1985இல் கொண்ட கொள்கையையும் மறந்து, ஆளுக்காள் அடிபட்டு பொடியள் கொஞ்சப்பேரை தேவையில்லாமல் சாக்கொடுத்துவிட்டு வவுனியாவுக்கங்கால ஓடிப்போட்டு இப்ப அதே பேரில அரசியல். அநியாயம் செய்தவர் எல்லாம் தலைவர்.

உங்களுக்குள்ளயும் புடுங்குப்பட்டு, இன்னொரு எழுத்தக்கூட்டி இன்னொரு கட்சி, இன்னொரு தலைவர். அதேபோல் அரசியல் செய்த சிலரும் இருப்பிடத்தை மாற்றி புதிய தலையில் புதிய கட்சி. அப்பப்பா போதுமடா ஒரே நோக்கில் நான் முந்தி நீ முந்தி, அது சரி இது சரி, அதைத்தா இதைத்தா என மூலைக்கு மூலை இயக்கங்களும் கட்சிகளும் அமைப்புக்களும் தலைவர்களும்.

உண்ணாணை சொல்லுறன் எங்க யாராவது ஒரு பொது மகன் இருத்தி வைச்சு இந்தக்கட்சிகளில் ஒரு நாலு கட்சியின்ற பெயரையாவது ஒழுங்கா சொல்லச் சொல்லுங்க பாப்பம். அனுபவசாலிகள், புத்திஜீவிகள், மக்களுக்காய் உழைத்தோர், பேசாமலிருக்கினம் என்பதால் தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகிவிட்டீர்கள்.

நீங்கள் சாதிக்கப்போவது எதுவுமில்லை. இதற்குமுன் எத்தனைதரம் கூடிக்கதைத்தீர்கள். குட்டையைக் குழப்பினீர்கள். ஒரு அறிக்கையையாவது ஒற்றுமையாக தயாரித்தீர்களா? ஒருவரையாவது நம்பினீர்களா? எல்லோரும் ஒரேமேசையிலிருந்து ஒன்றாக ஒப்பமிட்டீர்களா? ஜனாதிபதி தேர்தலில் ஒற்றுமை பேணினீர்களா? ஒருமித்துப் பேசினீர்களா? அப்போது தமிழ் அரசை ஒரு பொருட்டாகக் கொண்டீர்களா? நாடாளுமன்றத் தேர்தல் வந்ததும் எல்லோரும் என்ன செய்தீர்கள்? ஆப்பத்தைப் பிச்சுப்புடுகினீர்களே? பாவம் அப்பாவி வடக்கு மக்கள் கிழக்கு மக்கள் போல் உண்மையாக பொதுவாக சிந்திக்க தெரியாமல் சந்தர்ப்பவாத அரசியலுக்கு அடிபணிந்துவிட்டனர். அரசியலை மறந்து வாக்களித்துவிட்டுக் கொட்டிவிட்டனர்.

இப்போ மட்டும் உங்களுக்கு ஏன் திடீர் ஞானம்.? என்ன நடந்தது? ஏனிந்த அவசர அவசரமான கூடிக்குலாவுகைகள்? உச்சாணிக் கொப்பிலிருந்தவர் உள்வீட்டுக்க சொல்லாமல் கொள்ளாமல் வருவதேன்? புதியவர்கள் வந்துவிட்டார்கள். இருப்பு பறிபோய்விடுமோ எனும் பயமா? இதனை முன்னமே அல்லவா யோசிச்சிருக்கவேண்டும் இருகரம் விரித்து அழைத்தபோது ஒன்று சேராமல் பகிடிபண்ணி போடா போ விருப்பமெண்டா எங்களிட்ட வா என்றது மறந்துவிட்டதா? இப்போதைக்கு தேர்தல் ஏதுமில்லை என அரசு அறிவித்திருந்தால் இப்படி ஆலாய்ப் பறப்பீர்களா?

இந்தநாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னைய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரே புத்திஜீவிகள் எல்லாரும் ஒரு கட்சியாகுங்கள் எனப் பேசினார்கள் எழுதினார்கள் யாராவது கேட்டார்களா? கட்சிகள் கூடிக்கொண்டே போகின்றன தலைமைகளும் கூடிக்கொண்டே போகின்றன. இந்தத் தலைமைகள் ஏன் தலைமைகளாக இருக்கின்றன? என்ன தகுதிகள் உள்ளன? எத்தனை மக்கள் விருப்போடு ஆதரிக்கிறார்கள்? இது தேவைதானா?

. 1985இல் ஒரு இயக்கமாக ஆக முடியாமற்போனதால்தான் பிரிந்து நின்றதால்தான் தோல்வி கண்டோம் என்பது மறுக்கமுடியாத உண்மை. அதே தோல்வி இனியும் தேவைதானா? சந்தர்ப்பத்துக்கேற்ப சுயவிருப்பு வெறுப்புகளால் சேர்ந்தும் பிரிந்தும் கூத்தாடத்தான் வேண்டுமா? ஆண்டிகள் கூடி மடங்கட்ட முடியுமா?

எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து எல்லா அவலங்களையும் இன்னல்களையும் அனுபவித்து கிடைத்த பதவியால் மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்து ஓய்ந்தவர்களில் ஒருவனாக உங்கள் எல்லோரையும் தமிழ் மக்கள் சார்பில் கரம் குவித்து சிரம் தாழ்த்திக் பணிவுடன் கேட்கிறேன் கலைத்துவிடுங்கள் கட்சிகளையும் அமைப்புக்களையும், துறந்துவிடுங்கள் தலைமைகளை. முடியாதவர்கள் அரசியலில் குளிர்காயாமல் ஒதுங்கிவிடுங்கள். நீங்கள் தூய தமிழ்ப் பற்றாளர்களாய் இருந்தால் தமிழினத்துக்காக உழைப்பவர்களாய் இருந்தால் தமிழ் நிலம் காக்கப்படவேண்டும் எனக்கருதினால் தலைக்கனம்விட்டு தலைமை ஆசைவிட்டு தமிழுக்காய் தமிழர்களுக்காய் ஒரு கட்சியின்கீழ் ஒன்றுபடுங்கள்.

கிராமங்கள் தோறும் மக்களை ஒருமுகப்படுத்தக்கூடிய எழுச்சிகளுக்காய் உழையுங்கள். இதைத்தான் சிவஞானம் ஐயாவும் பதில் தலைவரானதும் பொறுப்புடன் வெளியிட்டார். அப்போதுதான் நாம் வெல்லுவோம். அது நீண்ட வரலாறு கொண்ட மக்கள் மனம் நிறைந்த கட்சியாக இருக்கட்டும். முடியுமா உங்களால்.? முடிந்தால் நாம் உயர்வோம்.

# கிளிநொச்சி ஏ-9 வீதியில் விபத்து : ஒருவர் இறப்பு

கிளிநொச்சி ஏ-09 வீதியில் கந்தசாமி கோவிலடியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 5.45 மணியளவில் யாழ். பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த அரச பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் பயணித்தவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விபத்தில் கனேசபுரம் கிளிநொச்சியை சேர்ந்த குமரேஸ்வரன் யோகலிங்கம் (வயது-75) என்பவரே உயிரிழந்துள்ளார்.

# வாகனத்தை மறித்து உணவு தேடிய யானை

காட்டு யானை ஒன்று சுற்றுலா பயணிகள் சென்ற வாகனத்தை வழிமறித்து உணவு தேடிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் புத்தல - கதிர்காமம் வீதியில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் குறித்து காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. அதில், சுற்றுலா பயணிகள் சென்ற வாகனத்தை வழிமறிக்கிறது. அதன் பின்பு, நிறுத்தப்பட்ட வாகனத்தின் ஜன்னல் ஊடாக தும்பிக்கையை திணித்து உணவை தேடுகிறது.





# அரிசித் தட்டுப்பாட்டை நீக்கக்கோரி மன்றாசி நகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கேதீஸ்)



அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை மன்றாசி நகரில் வர்த்தகர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்கரப்பத்தனை, மன்றாசி நகர வர்த்தகர்கள் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, நகர வர்த்தகர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு சுலோகங்களை ஏந்தியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டனர்.

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதால் அதனை உரிய வகையில் நுகர்வோருக்கு விற்கமுடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும், இதனால் சிறு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் தமிழ் மக்கள் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாட இருக்கின்ற நிலையில் பொங்கல் பொங்குவதற்கு சிவப்பு அரிசி தேவைப்படுகின்றது. எனினும், நாட்டில் சிவப்பு அரிசி தட்டுப்பாடு நிலவுகின்றது.

எனவே சிவப்பு அரிசியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்கமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கும், அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் மேலும் கருத்து தெரிவித்தனர்.

# தலைவர் சங்கர் ராஜியின் 20ஆவது ஆண்டு நினைவு

(கேதீஸ்)





தலைவர் சங்கர் ராஜிவின் 20 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நேற்று (வெள்ளிக்கிழமை) அனுஸ்டிக்கப்பட்டது.

தலைவர் சங்கர் ராஜி இலங்கைத் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னோடி தலைவர், ஈழத்தமிழரின் விடுதலைக்காகவும் நியாயத்திற்காகவும் போராடிய வீரத்துணிவு மிக்க தலைவர். 1987 ஆம் ஆண்டு ஜனநாயகப் பாதைக்கு வந்தாலும், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் மதிப்புகளையும் இலட்சியங்களையும் பாதுகாக்க அவர் அரும்பாடுப்பட்டவர்.

தமிழ்தேசியப்போராட்டத்திற்கு நீடித்த அரசியல் தீர்வொன்றை கொண்டுவர, தலைமைத் திறமைக்கும் பொறுப்புணர்வுக்கும் இணையாக அவர் செயலாற்றினார். பல சிரமங்களையும் தாண்டி, அனைவரும் சமத்துவத்துடனும் உரிமையுடனும் வாழும் ஒரு சமுதாயத்தை உருவாக்க அவரது கனவுகள் சார்ந்திருந்தன.

அவரின் நெடுங்கால விடுதலைப் பயணமும் உயர்ந்த நெறிமுறைகளும் எப்போதும் தமிழினத்திற்கும், தன்னலமற்ற தலைமைத்திறமையின் ஆதர்சமாக இருக்கும்.

திம்பூ அமைதி பேச்சுகள் மற்றும் திம்பூக் கொள்கைகள் தலைவர் சங்கர் ராஜி, 1985ஆம் ஆண்டு திம்பூக் கொள்கைகளின் ஆசிரியராக இருந்தார், இது தமிழர் விடுதலை இயக்கத்தின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அவரது வழிகாட்டுதலுடன், தமிழ்நாட்டில் ஒரு நீடித்த தீர்வை பெற்றுக்கொள்ள இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

அவர், மற்ற தமிழ் விடுதலை குழுக்களுடன் இணைந்து, இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு முன் உள்ள பேச்சுகளில் முக்கிய பங்கு வகித்தார். இது தமிழர்களுக்கான நீதி மற்றும் உரிமைகளுக்கான போராட்டத்திற்கு மிகவும் முக்கியமான காலகட்டமாக அமைந்தது. தமிழர் உரிமைகள் மற்றும் அரசியல் உரையாடலுக்கான அவரது போராட்டங்கள் இந்த காலகட்டத்தில் முக்கியமானவை.

அவர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை அடையவும், அமைதியின் பரப்புகளுக்கு உதவும் வகையில் தனது தலைமைத்திறமையை ஒப்புக் கொண்டார். 2005 ஆம் ஆண்டு அவரின் மறைவின் பின்னர் அவருடைய மகன் நேசன் சங்கராஜியினால் சங்கர்ராஜி எனும் பெயரில் அறக்கட்டளையொன்று உருவாக்கப்பட்டு மக்களுக்கு பல்வேறு சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மலையக பகுதிகளிலும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கஸ்ட பிரதேச பாடசாலைகளுக்கு கணணிகள் வழங்குதல், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், சிறுவர் பராமறிப்பு நிலையங்களுக்கு இலவசமாக முட்டைகள் வழங்குதல், இலவசமாக பிள்ளைகளுக்கு உணவு வழங்குதல் என பல்வேறு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தலைவர் சங்கர் ராஜி எம்மைவிட்டு மறைந்தாலும் அவரின் அறக்கட்டளையூடாகவும் அதன் மகத்தான சேவைகளூடாகவும் அவர் என்றும் மக்கள் மத்தியில் நினைவு கூரப்படுகின்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் பண்பாட்டுப் பெருநாள்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம்

## ஐங்கரநேசன் தெரிவிப்பு



தைப்பொங்கல் மதங்களைக் கடந்து தமிழ் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்ற ஒரு பண்பாட்டுப் பெருவிழா. இயற்கையைப் போற்றுகின்றஇவ்விழாவில்இயற்கைக்குஇசைவான மண்பானைகளிலேயே தொன்றுதொட்டுப் பொங்கல் இடம்பெற்று வந்துள்ளது. ஆனால், வசதி கருதி மண்பானைகளைத் தவிர்த்து அலுமியப் பானைகளில் பொங்கும் போக்கு எம்மிடையே அதிகரித்துள்ளது.

அலுமினியப் பாத்திரங்களை முற்றாகத் தவிர்க்க இயலாது போனாலும் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாள்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற பசுமை இயக்கத்தின் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் -

அலுமினியம் பாரம் இல்லாத ஓர் உலோகம்



என்பதால் கையாள்வதற்கு சுலபமானது. உலோகம் என்பதால் இலகுவில் வெப்பத்தைக் கடத்தி சமையலை விரைந்து முடிக்க வல்லது. வளைந்து நெளிந்தாலும் ஒருபோதும் உடைந்துவிடாது, விலையும் மலிவானது. இவை போன்ற காரணங்களால் சமையல் அறைகளில் மட்பாத்திரங்களைப் புறந்தள்ளி அலுமினியம் இன்று கோலோச்சுகின்றது.

அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைக்கும்போது அலுமினியம் உணவுடன் கலப்பதைத் தடுக்கும் பொருட்டுப்பாத்திரத்தின்உட்பகுதியில்அலுமினியம் ஒட்சைட்டுப் படலம் இடப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவும்போது அலுமினியம் ஒட்சைட்டு தேய்வடைந்துஉணவுப்பாதுகாப்புகேள்விக்குறியாகி விடுகிறது.

மேலும், சமைக்கப்படும் உணவுப் பொருளின் அமில, கார இயல்பு, சேர்க்கப்படும் உப்பு, சமைக்கும் வெப்பநிலை என்பனவற்றைப் பொறுத்து அலுமினியம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து உணவுடன் கலப்பது அறியப்பட்டுள்ளது. உணவுடன் உடலில் கலக்கும் அலுமினியம் மூளை நரம்புகளைப் பாதிப்பதோடு ஏற்கனவே சிறுநீரக நோயுடையவர்களின் சிறுநீரகங்களை மேலும் பாதிப்படையவும் செய்கிறது என ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

மட்பாத்திரங்கள் அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்ணிய துவாரங்கள் ஊடாக வெப்பத்தைப் பரவி உணவைச் சீராக வேகவைக்கிறது. மெதுவாகவே சூடுபடுத்துவதால் உணவில் போசணைப் பொருள்களின் அழிவு தவிர்க்கப்படுகிறது.

மண் கார இயல்பு கொண்டதால் உணவில் அமிலத் தன்மையை நடுநிலைப்படுத்துகிறது. சமைக்கும்போது மண்ணிலிருந்து கனியுப்புகள் உணவுடன் கலப்பதால் உணவு கூடுதல் போசணைப் பெறுமானம் பெறுகிறது. இவற்றோடு, உணவின் வாசனையுடன் மண் வாசனையும் சேர்ந்து உணவுக்குக் கூடுதல் சுவையும் கிடைக்கிறது.

எல்லாவற்றையும் விரைவாகச் செய்துவிட வேண்டும் என்று நினைக்கும் நாம் உடல் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய சமையலையும் அவ்வாறே விரைந்து முடிப்பதற்காக உலோகப் பாத்திரங்களை நாடியுள்ளோம். இதன் விளைவாக நோய்க்கும் ஆளாகி வருகிறோம். மட்பாண்டங்களுக்கு உடனடியாகத் திரும்புதல் இயலாததாக இருக்கலாம். எனினும், தமிழ் மக்களின் இயற்கையைப் போற்றும் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாள்களிலாவது மண்பானைகளில் பொங்குவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினையர்களது வாழ்வையும் வளப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.



# தனியார் கம்பனிகளின் முறையற்ற நடவடிக்கைகளால் மலையகப் பெண்களின் உரிமைகளுக்கு கடும் பாதிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசனம்

இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் பணியாற்றும்மலையகத்தமிழ்பெண்கள்இன,மொழி மற்றும் பொருளாதார ரீதியில் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்துவருவதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தனியார் கம்பனிகளின் முறையற்ற நடவடிக்கைகளால் அப்பெண்களின் சீரான வேலைச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பான வீடு என்பவற்றுக்கான உரிமைகள் வெகுவாக மீறப்படுகின்றன என விசனம் வெளியிட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் குழுவின் 90 ஆவது கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 - 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதனை முன்னிறுத்தி கடந்த 2016 - 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் (அதற்குப் பின்னரும்) பெண்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருவதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

பெண்களுக்குஎதிரானசகலவிதமானஒடுக்குமுறை களையும் முடிவுக்குக்கொண்டுவருதற்கான பிரகடனத்துக்கு அமைவாக தாம் கொண்டிருக்கும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்தால்முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்.

இருப்பினும் கடந்த 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான தேசிய வேலைத்திட்டம் 2021 ஆம் ஆண்டுநிறைவுக்குவந்தது. அதனைத்தொடர்ந்துபுதிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

அதேவேளை பெண்களை வலுவூட்டுவதுடன் பாலினசமத்துவத்தை மேம்படுத்தும்நோக்கில்கடந்த ஆண்டு37ஆம்இலக்கபெண்கள்வலுவூட்டல்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அச்சட்டத்தின் ஊடாக பெண்களுக்கான உரிமைகளை அனுபவிப்பதற்கு சகல பெண்களும் உரித்துடையவர்கள் என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று பெண்களுக்கு எதிரான சகல விதமான ஒடுக்குமுறைகளையும் முடிவுக்குகொண்டுவருவதற்கான பிரகடனத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் இலங்கையின் அரசமைப்பு உள்ளடங்கலாக பல்வேறு சட்டங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இலங்கையில் நடைமுறையிலுள்ள சில சட்டங்களில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை ஊக்குவிக்கக்கூடியவாறான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக 1951 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம், 1952 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க கண்டிய விவாக, விவாகரத்துச் சட்டம், 1911 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க திருமண உரிமைகள் மற்றும் மரபுரிமை ஆணைச்சட்டக்கோவை என்பன அத்தகைய ஒடுக்குமுறை சரத்துக்களைக் கொண்டிருக்கின்றன.

இச்சரத்துக்கள் முற்றாக நீக்கப்படவோ அல்லது பெண்களுக்கு எதிரான சகல விதமான ஒடுக்குமுறைகளையும் முடிவுக்குக்கொண்டுவருவதற்கான பிரகடனத்துக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவோ வேண்டும். அதேபோன்று முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் ஊடாக முஸ்லிம் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதுடன், அவர்களது நீதிக்கான அணுகல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சில சந்தர்ப்பங்களில் மதரீதியான ஆடைகளை அடிப்படையாகக்கொண்டு பெண்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

உதாரணமாக கடந்த 2018 ஆம் ஆண்டு திருகோணமலையில் அமைந்துள்ள பாடசாலை யொன்றுக்குள்முஸ்லிம்பெண்கள்அணியும்'அபாயா' ஆடையுடன்பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படாமை குறித்து உதவி ஆசிரியைகள் நால்வரால் எமது ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டது.

அத்தோடு இலங்கை சட்டத்தின்கீழ் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளும் தொடர்ச்சியாக ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

எனவே அவர்களது பெயர்ப்பதிவு மற்றும் அவர்களின் பிறப்புச்சான்றிதழ்களில் பால் மாற்றம் செய்தல் என்பன தொடர்பில் சுகாதார அமைப்பு, பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் நாம் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டுவருகிறோம் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக நீதிக்கான அணுகல், சமாதானம்மற்றும்பாதுகாப்பு,அரசியல்,பொதுவாழ்வு மற்றும் தீர்மானம் எடுத்தலில் பங்கேற்றல், வரவு, செலவுத்திட்டத்தில் பெண்களைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கான நிதியொதுக்கீடு, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் பெண்கள் முகங்கொடுத்துவரும் ஒடுக்குமுறைகள் குறித்தும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

# சுழிபுரத்தில் கசிப்புடன் சந்தேகநபர் கைது

வட்டுக்கோட்டைபொலிஸ்பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் வியாழக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார், குறித்த சந்தேகநபரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது ஒரு போத்தல் கசிப்புடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## சுமந்திரன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளனர்.

சாணக்கியன், சுமந்திரன் முதலிலும் சிறீதரன் பின்னருமாக தனித் தனியாக விமானங்களில் அங்கு சென்று சேர்ந்தனர். சென்னையை அடைந்த சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் திமுக (திராவிடர் முன்னேற்றக் கழகம்) நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழியைச் சந்தித்து உரையாடினர்.

ஈழத் தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும், இந்திய மத்திய அரசில் ஈழத் தமிழ் மக்களுக்காகத் தமிழ் நாட்டின் குரலைத்தொடர்ந்துஎழுப்பவேண்டிஇருப்பதன் அவசியம் குறித்தும் உரையாடினர்.

தமிழ்நாட்டில் இரு தினங்கள் இடம்பெறும் மாநாட்டை முடித்துகொண்டு மூவரும் ஜனவரி 13 நாடு திரும்புவர்.

இந்த மாநாட்டுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை விமானத்தில்ஏறவிடாமல்அதிகாரிகள்தாமதிக்க வைத்தனர். அவருக்கு எதிராகப் பயணத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து அங்கு பதற்றமான சூழல் நிலவியது. சில வாரங்களுக்கு முன்னர்கூடத் தான் கனடாவிற்குச் சென்று திரும்பிய நிலையில் எப்போது, எதற்காக பயணத்தடை விதிக்கப்பட்டது, அதற்கான காரணங்களைக் காட்டுங்கள் என்று அதிகாரிகளிடம் சிறீதரன் கேட்டபோது, அவர்களால் தெளிவான பதில்களைத் தர முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இதே மாநாட்டில் பங்கேற்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் விமான நிலையத்திற்கு வந்த சமயத்தில், விடயத்தைக் கேள்விப்பட்டு சிறீதரனுக்கு உதவி செய்வதற்காக அங்கு சேர்ந்துகொண்டார். இருவருக்குமே அதிகாரிகளிடமிருந்து தெளிவான பதில் கிடைக்காதநிலையில், விமானம்புறப்படுகின்ற இறுதித் தருணத்தில் சிறீதரன் புறப்பட அதிகாரிகள் அனுமதி வழங்கினர்.

## காணாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் தற்போது மாறிவிட்டன, பத்துவருடங்களிற்கு முன்னர் காணப்பட்ட நிலை தற்போதில்லை, இந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நாங்கள் மாறவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் அலுவலகம் போன்றவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நாங்கள் ஏனைய பல அமைச்சுக்களுடன் இணைந்து செயற்படவுள்ளோம் என்றார் அமைச்சர்.

அரசியல் நலன்களை அடிப்படையாக கொண்டுநியமனங்களைமேற்கொண்டதால் காணாமல்போனோர் அலுவலகம் மீதான மக்களின் நம்பிக்கைக்கு முன்னையை ஆட்சியாளர்கள் பாதிப்பை ஏற்படுத்தினர். சமூகத்தில் இந்தப் பொறிமுறைகள் குறித்து நம்பிக்கையின்மை நிலவுகின்றது, இதற்குத் தீர்வைக்காண்பதற்கு பேச்சுமூலம்நம்பிக்கை ஏற்படுத்தப்படவேண்டும், இந்த அமைப்புகள் மிகவும் மந்தகதியில் செயற்படுகின்றன, இந்தச் செயற்பாடுகளை துரிதப்படுத்துவது அவசியம்,

முன்னைய ஆளும்தரப்புக்களிடம் தேசிய ஐக்கியத்தை ஊக்குவிப்பதற்கான உறுதியான கொள்கை எதுவுமிருக்கவில்லை, நாங்கள் இதனை சரிசெய்வோம் - என்று மேலும் தெரிவித்தார்.

## ஊடகத்துறையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுகையில், பத்திரிகைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார்.

நாடாளுமன்றத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெயர்களைக்கூறி உரையாற்றுகின்றார். நான்கடந்தகாலங்களில் ஊடகத்துறை அமைச்சில் பணியாற்றியவன் என்ற ரீதியில், தற்போதைய ஆளும்தரப்பு ஊடகத்துறையைக் கையாளும் விதம் மிகவும் ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆளும்தரப்பு தற்போது பதற்றமடைந்து துலங்கலை வெளிக்காட்டும் நிலையை அடைந்திருக்கின்றது. வெவ்வேறுசம்பவங்கள் தொடர்பில்ஊடகங்கள்மாறுபட்ட கருத்துக்களை வெளியிடக்கூடும். இருப்பினும்நாம் அதனைப் பொறுமையுடன் கையாண்டு, அதற்கு அறிவார்ந்த ரீதியில் பதிலளிக்கவேண்டும்.

மாறாக ஊடகங்கள் தமக்கு ஏற்றவாறு அல்லது தமக்குச் சார்பாகச் செயற்படவில்லை என ஆளும்தரப்புப் பதற்றம் அடையக்கூடாது. எனவே பிரதமர், ஊடகத்துறை அமைச்சர் உள்ளிட்ட ஆளும்தரப்பின் பிரதிநிதிகள் ஊடகங்களைப் பெயர் குறிப்பிட்டுத் தாக்குவதை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரவேண்டும்.

அடுத்ததாக நாட்டின் பொருளாதார நிலவரம் தொடர்பில் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றவிவாதத்தின்போது, ஆளும்தரப்பின் பொருளாதார மேம்பாட்டு செயற்திட்டத்தை சீர்குலைப்பதற்குஎதிர்க்கட்சிமுயற்சிப்பதாகவும், எதிரணிஎன்னகூறினாலும்தாம்தற்போதைய பாதையிலேயே பயணிப்போம் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த கூறினார்.

அதனை சீராக ஆராய்ந்து பார்த்தால்,"நாம் ரணில் விக்ரமசிங்கவினால் உருவாக்கப்பட்ட பொருளாதாரப் பாதையில் பயணிக்கின்றோம். அதற்குஎதிரான கருத்துக்கள் எதிரணியினரால் வெளியிடப்படுகின்றன. இருப்பினும் நாம் அதே பாதையிலேயே பயணிப்போம். ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைத் திட்டத்திலிருந்து வெளியேறமாட்டோம்" என்றே அவர் கூறுகின்றார்.

எனவே ஆளும்தரப்பின் பொருளாதார நிபுணர் குழு ஜனாதிபதியை நெருக்கடிக்குள் தள்ளுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு என்றே நான் கருதுகின்றேன். நாம் ஆட்சியிலிருந்த காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றன. ஆளும்தரப்பின் அங்கம்வகிக்கும் பொருளாதார நிபுணர் குழுவினர் அரச கொள்கைகளுக்கு முரணான விதத்தில்செயற்படுவார்கள். அதன் விளைவாக ஆட்சியாளர் நெருக்கடிக்குள் தள்ளப்படுவார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார வேலைத் திட்டம் பொருத்தமற்றது என்றும், ஆகவே புதிய பொருளாதார வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்றும் மக்கள் கருதியமையினாலேயே புதிய தரப்பொன்று தெரிவுசெய்யப்பட்டது.

அது மாத்திரமன்றி தேசிய மக்கள் சக்தி புதிய கொள்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதாகக் கூறித்தான் ஆட்சிபீடமேறியது. இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய ஆளும்தரப்பின் பொருளாதார நிபுணர்களால் கூறப்படும் கருத்துக்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க விசேட கவனம் செலுத்தவேண்டும்.

அதேவேளை தற்போது 'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டமே ஆளும்தரப்பின் பிரதான கொள்கைத்திட்டமாக மாறியிருக்கின்றது. அதனைவிட வேறு எந்தவொரு கொள்கையும் ஆளும்தரப்பிடம் இல்லையா? அதேபோன்று இந்த 'தூ-ய ஸ்ரீலங்கா' செயற்திட்டத்தின் நோக்கம் மற்றும் அதனூடாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உரியவாறு விளக்கமளிக்கப்படவில்லை போல் தெரிகிறது.

அதுமாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரம் இன்னமும் முழுமையாக மீட்சியடையவில்லை. வெளிநாட்டுக் கையிருப்பின் அளவை உயர்த்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வரவு, செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படவில்லை. தேர்தலின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

அவ்வாறிருக்கையில் எதற்காக 'தூய ஸ்ரீலங்கா' செயற்திட்டத்துக்கு இந்தளவு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது? இச்செயற்திட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்துவதிலும் முறையான திட்டமிடல் இல்லை - என்றார்.

### கொழும்புத் துறைமுகத்தின்

# கிழக்கு முனைய பணிகளை துரிதப்படுத்த அமைச்சு முடிவு

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்த துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள், விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவன் கொடிதுவக்கு தெரிவித்தார்.

இதனிடையே, அதானி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் மேற்கு முனைய அபிவிருத்திப் பணிகளை அடுத்த மாதத்திற்குள் நிறைவு செய்ய முடியுமெனவும் அவர் கூறினார்.

இந்தஇருமுனையங்களின்நிர்மாணப் பணிகளும் நிறைவடைந்தவுடன் கொழும்பு துறைமுகத்தின் வருடாந்த கொள்கலன் நடவடிக்கை கொள்ளளவு 8 மில்லியனிலிருந்து 13 மில்லியனாக அதிகரிக்குமென துறைமுகங்கள், விமான சேவைகள் பிரதியமைச்சர் ருவன் கொடிதுவக்கு குறிப்பிட்டார்.

இதுநாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் சர்வதேச சந்தைக்கும் வலுவான பிரவேசமாக அமையுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# 90 மருந்துகளின் விலைகளை குறைக்க முயற்சி

90 வகையான மருந்துகளின் விலைகளைகுறைப்பதற்கு ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

இதற்கெதிராக சில மருந்து நிறுவனங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கினால் இந்த நடவடிக்கைக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதனால், நகர்த்தல் பத்திரம் ஊடாக விடயங்களை முன்வைக்கவுள்ளதாக அவர் கூறினார்.

அதன் பின்னர் மருந்துகளின் விலைகளைகுறைக்கும்நடவடிக்கையை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உயரதிகாரி தெரிவித்தார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலும் இதன்போது பிரதமர் கவனம் செலுத்தினார். நிரந்தர பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வதற்கென தேசிய தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் அதேநேரம் முன்னேறி வரும் சந்தைகளில் பலம்வாய்ந்த இருப்பைஸ்தாபிப்பதன்தேவை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

தூதுக் குழு பிரதானிகளில் கட்டார் இராச்சியத்திற்கென பெயரிடப்பட்ட தூதுவர் ஆர்.எஸ். கான் அஷாரட், நியசிலாந்துக்கென பெயரிடப்பட்ட உயர்ஆணையர் டபிள்யு.ஜீ.எஸ்.பிரசன்ன, ரஷ்ய அரசிற்கென பெயரிடப்பட்ட தூதுவர் எஸ்.கே.குணசேகர, குவைத் இராச்சியத்திற்கென பெயரிடப்பட்ட தூதுவர் எல்.பீ.ரத்னாயக்க, எகிப்து அரேபிய இராச்சியத்திற்கென பெயரிடப்பட்ட தூதுவர் ஏ.எஸ்.கே.செனவிரத்ன உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கை பிரதமர் அலுவலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்ரி மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர்சாகரிகாபோகஹவத்தஆகியோரும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

## உதயங்கவினால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதான லியனகே சரத் சந்திரசிறி என்பவராவார். இவர்நுகேகொடை, தலபத்பிட்டிய, கனத்த வீதியில் வசிக்கும் உதயங்க வீரதுங்கவின் பக்கத்து வீட்டில் வசித்து வந்துள்ளார்.

வீட்டுக் காணியின் எல்லைச் சுவரை உடைப்பது தொடர்பான வாக்குவாதத்தின் போது நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உதயங்க வீரதுங்க காயமடைந்த நபரை பிளாஸ்டிக் குழாயால் தாக்கியுள்ளார், இதன் விளைவாக பாதிக்கப்பட்டவரின் முகத்தில் பலத்தகாயங்களும்மூக்கும்உடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உதயங்க வீரதுங்கவின் தாக்குதல் சம்பவம் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கெமராவிலும் பதிவாகியுள்ளது.

அதன்படி, உதயங்க வீரதுங்க நேற்று பிற்பகல் மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தோர் பழிவாங்கப்படும் ஆபத்து உள்ளது

## றஜீவன் எம்.பி. சுட்டிக்காட்டு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கிராமப்புற மற்றும் சாதாரண மக்கள் அணுகமுடியாமல் உள்ள சட்டங்களை அமுல்படுத்துகின்றது என தேசிய மக்கள் சக்தியின் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான 'தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் 2025 - 2029 நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான செயலமர்வு நடைபெற்றது.

இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி -

பொலிஸ் நிலையங்கள் அரச திணைக்கள மட்டத்தில் செய்யப்படும் லஞ்ச ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் சரியான முறையில் விசாரணை செய்யப்படுகின்றனவா என்பதை கண்காணிக்க விசேட குழுக்ங்கள் இல்லை.

முறைப்பாடு அளித்தவர்கள் பழிவாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன, லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் போதிய ஆளணி இல்லை, தொழில்நுட்ப ஆதரவு பற்றாமை காரணமாக ஊழலை ஒழிக்க முடியாதுள்ளது.

எனவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து இலங்கை முழுவதும் ஊழலை ஒழிக்க விசேட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.



# கடற்தொழில் அமைச்சர் சீனத் தூதுவர் சந்திப்பு

கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான சீன துதுவர் குய் ஜென்ஹாங் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு கடற்தொழில் அமைச்சின் காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.



# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் மேல் நீதிமன்றநீதிபதிரங்கதிசாநாயக்கவுக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) வழங்கப்பட்டது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.01.2025இல் வெளியிடப்பெற்றது